(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களது வேலை நிறுத்தம் குறித்து.

திரு. துரை கலியமூர்த்தி : பாயின்ட் ஆப் ஆர்டர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சட்டத்துறை மாணவர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதிலே பிற்பட்ட மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகை 92. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் 41, 42—வது விதிகளின் கீழ் ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா ? அப்படிக் கொடுத்திருந்தால், நாளை எடுத்துக் கொள்ளப் போகிறோம், அப்படி வரும்போது கேளுங்கள், இப்போது உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர், தாங்கள் 42 லிருந்து 41க்குப் போகிறீர்கள். ஆகவே, இந்த 42—ஐப் பொறுத்தவரையில், சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் 70 பேர்கள் கைது செய்யப்பட்டது பற்றி, நேற்று இந்த அவையிலே எழுப்பப்பட்டது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி இந்த 42—ஐ எடுததுக் கொண்ட பிறகுதான் அந்த மேட்டரைக் கேட்க வேண்டும்.

திரு. துரை முருகன் : இதுபற்றி நேற்று நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு விவரம் தர வில்லை, 'கேதர்' பண்ணிச் சொல்வதாகச் சொன்னார்கள். அவர் ஒரு ஸ்டேட்மெண்ட் வைத்திருக்கலாம். அப்போது டிஸ்கஸ் பண்ணத் தேவையில்லை. அவர்கள் எப்படிக் கைது செய்யப் பட்டார்கள் என்ற சமாசாரம் தெரியவில்லை. அப்படிச் சொல்லாததால், நகரிலே எங்கும் ரொம்ப பதட்ட நிலை.

(இ) உணவுப் பொருள் வழங்கு துறை ஊழியர்கள் கைது குறித்து.

திரு. க. சுப்பு : நேற்றைய தினம் உணவுப் பொருள் வழங்கு துறையில் இருக்கும் ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருப்பதுபற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இன்று அது வரவில்லை. அதே போல் பொள்ளாச்சியில் குவாலிடி மில்லில் பலர் கைது செய்யப்பட்டு போலீசார் மில்லை ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். அதனால் பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அமைச்சர் அவர்கள் 'எவர் ரெடி மினிஸ்டர்' இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.